முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1581

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**27.01.2024**, சனிக்கிழமை

1. பாரதனில் பேரற்புதம் நிகழ்த்த
பரோபகார ஞான வித்து விதைத்துமே
வரமாக உலகோர்க்கு ஞானம் அருளுகின்ற
வள்ளலே வாழுகின்ற ஞானியே
2. ஞானியே ஆறுமுக அரங்கனே
ஞாலமதில் உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
கனிவுகொண்டு ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் தை மாதம் 13 ம் நாள், 27.01.2024, சனிக்கிழமை)
கண்டுரைப்பேன் அரங்கன் உன் சக்தி பெருக வேண்டி
3. வேண்டியே இந்த கலியுகத்தில்
விடாது உலகோரை ஞான வழிக்கு
தொண்டு வழி அழைத்து தர்மபலம் வழங்கி
தெளிவூட்டி தொடர்ந்து தர்மஞானப் பாதையில்
4. பாதைதனில் உலகோர் அகலாத வண்ணம்
பழுதின்றி வழி நடத்தும் குரு அரங்கனே
ஆதரவாய் உன் தர்மத்தைக் காக்கும் மக்களெல்லாம்
அகிலத்தில் ஞானியாவது உறுதியப்பா
5. உறுதி தந்து உன்வழி ஒரு மாபெரும் கூட்டத்தை
உலகை மாற்றும் மகா சக்தியாக மாற்ற உள்ளேன்
உள்ளபடி உன்னால் சரணாகதி
உயர்வுபட என்வழி வந்தவர்க்கெல்லாம்
6. மண்ணுலகில் ஞானிகளாகும் வாய்ப்பு சடுதி கிட்டும்
மகான்களாகவே அரங்கன் உன்வழி
உலகமக்கள் மண்ணுலகை மாற்றுகின்ற
அந்த அற்புதமான ஞானசித்தர் காலத்தில்

7. காலமதில் இவர்களெல்லாம் ஞானிகளாக வாழ்ந்து
கலியுகத்தை மாற்றி ஞானயுகமாக
ஞானவான்கள் ஆளுகின்ற ஞானபூமியாக
ஞான ஆட்சிக் காலமாகவே அற்புதம் சடுதி நிகழக்கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–